

# ஒரு குழந்தைக்காக அறக்கட்டளையில் வைக்கப்பட்டிருக்கும் பணத்தைக் கையாளுதல்

(தகவல் தாள் 3)

24 Feb 2020 *அன்று புதுப்பிக்கப்பட்டது*

## பயனாளர்கள் குழந்தைகளாக இருந்தால் என்னவாகும்?

நாங்கள் மசேநி பணம், சொத்துக்களில் இருக்கும் பணம் அல்லது ஒரு மோட்டார் வாகன விபத்திற்காக வழங்கப்படும் இழப்பீட்டின் மூலம் கிடைக்கும் பணத்தைப் பகிர்ந்தளிக்கும் போது, சிலநேரங்களில் நாங்கள் அளிக்க வேண்டிய அப்பணம் ஒரு குழந்தைக்கானதாக இருக்கும். கீழே பட்டியலிடப்பட்டுள்ள வயதுகளுக்கு இணங்க அக்குழந்தை பணத்தைப் பெறத் தகுதிபெறும் வரை, நாங்கள் அக்குழந்தைக்காக அப்பணத்தை அறக்கட்டளையில் வைத்திருப்போம்.

| பணத்தின் வகை | வயது |
|---|---|
| வாரிசுதாரர் நியமனம் செய்யப்பட்ட மசேநி பணம் | 18 |
| வாரிசுதாரர் நியமனம் செய்யப்படாத மசேநி பணம் | 21 |
| சொத்துக்களின் பணம் | 21 |
| மோட்டார் வாகன விபத்திலிருந்து கிடைத்த பணம் இழப்பீடு | 21 |
| ஒரு பணிக் காயத்திற்கான இழப்பீடு (சுய) | 18 |
| அரசாங்கத்தின் இறப்புப் பணிக்கொடை | 18 |

## அறக்கட்டளையில் வைக்கப்பட்டிருக்கும் பணத்தை நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

அறக்கட்டளையில் வைக்கப்பட்டிருக்கும் பணத்தை நாங்கள் நிரந்தர வைப்புகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் போன்ற பாதுகாப்பான நிதி சார்ந்த முதலீடுகளில் முதலீடு செய்வோம். குழந்தை பருவ வயதை (18 அல்லது 21 வயது) அடையும் போது, நாங்கள் அவருக்கு அப்பணத்தையும், ஈட்டிய வட்டியையும் (எங்கள் கட்டணங்களைக் கழித்துக்கொண்டு) வழங்குவோம்.

பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளர், குழந்தையின் கணக்கு அறிக்கையைப் பின்வரும் எங்கள் இணையத்தளத்தில் காணலாம்: https://eservices.mlaw.gov.sg/PTO/welcome.xhtml.

## அறக்கட்டளையில் வைத்திருக்கும் பணத்தை முதலீடு செய்வதற்கு நீங்கள் விதிக்கும் கட்டணங்கள் எவை?

அறக்கட்டளையில் வைத்திருக்கும் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டப்படும் வட்டித் தொகையின் மீது நாங்கள் விதிக்கும் கட்டணம் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| ஈட்டிய வட்டித் தொகை | கட்டணம் |
|---|---|
| முதல் $1,000 -க்காக | 5.50% |
| அடுத்த $1,000 -க்காக | 4.50% |
| அடுத்த $1,000 -க்காக | 3.50% |
| $3,000 -க்கும் அதிகமான தொகைகளுக்காக | 2.25% |

இந்தக் கட்டணங்களில் ஜிஎஸ்டி உள்ளடங்கும். இவற்றை விட்டுக்கொடுக்க முடியாது.

## இப்போது அந்தக் குழந்தையின் ஒரே பெற்றோர் அல்லது காப்பாளராக நான் இருப்பதால் மற்றும் அக்குழந்தையை வளர்ப்பதற்கு நான் பொருளாதாரச் சிரமங்களைக் கொண்டிருப்பதால், அறக்கட்டளையில் வைக்கப்பட்டிருக்கும் பணத்தை உங்களால் விடுவிக்க முடியுமா?

பெண்களுக்கான சாசனத்தின் பிரிவுகள் 68 மற்றும் 70-இன் கீழ், ஒரு குழந்தையால் தன்னைப் பராமரித்துக்கொள்ள முடியாது எனில், அவரைப் பேணிப் பராமரிப்பது அல்லது அவரது பராமரிப்புக்காகப் பங்களிப்பது பெற்றோர் அல்லது காப்பாளரின் கடமையாகும்.

நீங்கள் ஒரு குழந்தையின் பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளர் எனில் மற்றும் அக்குழந்தையை வளர்ப்பதற்கு நீங்கள் பொருளாதாரச் சிரமங்களைச் சந்திக்கிறீர்கள் எனில், எங்களிடம் உள்ள குழந்தையின் பணத்திலிருந்து பராமரிப்புச் செலவுத்தொகைகளைப் பெற நீங்கள் எங்களிடம் விண்ணப்பம் செய்யலாம்.

பராமரிப்புச் செலவுத்தொகை எவ்வளவு என்பதை முடிவுசெய்வதற்கு, நாங்கள் பின்வருனவற்றைக் கருத்தில் எடுத்துக்கொள்வோம்.

1. உங்களின் வருமானம், சொத்து மற்றும் பிற நிதி சார்ந்த வள ஆதாரங்கள்.
2. உங்களின் நிதித் தேவைகள் மற்றும் பொறுப்புகள்.
3. நிதித் தேவைகள் மற்றும் குழந்தையின் வயது.
4. குழந்தைக்குக் கல்வி அல்லது பயிற்சி அளிக்கப்படும் முறை அல்லது அவற்றை அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற முறை.

அறக்கட்டளையின் ஆகமொத்த மூலதனம் ,க்குக் குறைவாக அல்லது அதற்குச் சமமாக இருந்தால்- 50,000$ ஆனால் ,க்கு அதிகமாக- 25,000$ 25,000$ குழந்தையின் அறக்கட்டளையில் இருந்து பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான வரம்புஆக இருக்கும்அறக்கட்டளையின் . அந்த அறக்கட்டளையில் இருந்தும் பணத்தைத் திரும்பப் பெ ,க்கு மேல் இருந்தால்- 50,000$ ஆகமொத்த மூலதனம்றுவதற்கான வரம்பு அறக்கட்டளையின் ஆகமொத்த மூலதனத்தில் %50ஆக இருக்கும் ,பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான வரம்பு எட்டப்பட்ட உடன் . குழந்தையின் நன்மைக்காக மேற்கொண்டு ஏதேனும் பராமரிப்புச் செலவுத்தொகைகளை அளிப்பதை அல்லது மேற்கொண்டு செலவினங்களை ஈடுசெய்வதை பொது அறங்காவலர் நிறுத்துவார்இந்த வரம்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதைக் கீழே . :கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள் விளக்குகின்றன

உதாரணம் - 1ஆகமொத்த அறக்கட்டளையின் மூலதனம் க்குக் குறைவாக இருந்தால்- 50,000$ ஆனால் ,க்கு அதிகமாக- 25,000$

| | |
|---|---|
| அறக்கட்டளையின் ஆகமொத்த மூலதனம் | $30,000 |
| வழங்கப்படக் கூடிய அதிகபட்ச தொகை | $25,000 |

உதாரணம் - 2ஆகமொத்த அறக்கட்டளையின் மூலதனம் %50 பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு ,க்கு அதிகமாக இருந்தாலும்- 50,000$ அறக்கட்டளை மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றால்

| | |
|---|---|
| அறக்கட்டளையின் ஆகமொத்த மூலதனம் | $80,000 |
| வழங்கப்படக் கூடிய அதிகபட்ச தொகை | $40,000 |

உங்கள் குழந்தை முதிர்பருவத்தை எட்டும் வேளையில் அவர் ஒரு அர்த்தமுள்ள தொகையைப் பெற்றுவாழ்வில் சிறப்பான துவக்கத்தைப் , அவரது நலன்களைப் பாதுகாப்பதற்கு இத்தகைய வரம்புகள் ,பெற முடிவதை உறுதிசெய்வதன் மூலம்விதிக்கப்பட வேண்டுமென்று சட்டம் கோருகிறது.

## நான் எவ்வாறு ஒரு குழந்தையின் பராமரிப்புச் செலவுத்தொகைக்காக விண்ணப்பிப்பது?

நீங்கள் பராமரிப்புச் செலவுத்தொகைக்காக https://eservices.mlaw.gov.sg/PTO/welcome.xhtml எனும் இணையத்தளத்தில் ஒரு கணினிவழியான விண்ணப்பத்தைச் செய்ய வேண்டியிருக்கும்.

நீங்கள் எங்களின் கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அனுகுவதற்கு, உங்களின் சிங்பாஸையும் தயாராக வைத்திருக்க வேண்டியிருக்கும். உங்களிடம் சிங்பாஸ் இல்லையென்றால், நீங்கள் https://www.singpass.gov.sg எனும் இணையத்தளத்தில் உங்கள் சிங்பாஸுக்காக விண்ணப்பம் செய்யலாம். நீங்கள் சிங்பாஸைப் பெறத் தகுதிபெறவில்லை எனில், நீங்கள் https://pto.mlaw.gov.sg எனும் எங்கள் இணையத்தளம் வாயிலாக ஒரு புகுபதிகை அடையாளம் மற்றும் மறைச்சொல்லுக்காக விண்ணப்பம் செய்யலாம்.

## நான் உங்களுக்கு என்னென்ன ஆவணங்களை அனுப்ப வேண்டும்?

உங்களால் குழந்தையை வளர்க்க இயலவில்லை என்பதற்கான சான்றையும் (உதாரணமாக, உங்களின் மாதாந்தரச் சம்பளப் பட்டியல்கள்), குழந்தையின் நிதித் தேவைகள் தொடர்பான ஆவணங்களையும் நீங்கள் அளிக்க வேண்டியிருக்கும்.

நாங்கள் பணம் வழங்குவதற்கு, குழந்தையுடன் தொடங்கப்பட்ட ஒரு கூட்டு சேமிப்புக் கணக்கின் சான்றையும் நீங்கள் எங்களுக்கு அளிக்க வேண்டியிருக்கும். கணக்குதாரர்களின் பெயர்களுடன் கூட்டு வங்கிக் கணக்கு எண்ணைக் கொண்ட வங்கி அறிக்கையின் நகலை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

## பராமரிப்புச் செலவுத்தொகை எவ்வாறு வழங்கப்படும்?

பராமரிப்புச் செலவுத்தொகையானது, ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் என மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஜைரோ வாயிலாக, குழந்தையுடன் பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளரால் பராமரிக்கப்படும் ஒரு **கூட்டுச் சேமிப்புக் கணக்கில்** வரவு வைக்கப்படும்.

## பராமரிப்புச் செலவுத்தொகைக்கும் மேல் கூடுதலாகச் செலவானால் நான் அத்தொகையைத் திரும்பப் பெற முடியுமா?

பராமரிப்புச் செலவுத்தொகையைக் கொண்டு குழந்தையின் கல்வி மற்றும் நலவாழ்வுச் செலவுகளைப் பூர்த்திசெய்ய முடியவில்லை எனில், அவற்றுக்காக நாங்கள் குழந்தையின் பணத்திலிருந்து உங்களுக்குத் திருப்பித் தரக்கூடும். நாங்கள் ஒவ்வொரு வேண்டுகோளையும் நிகழ்வின் அடிப்படையில் பரிசீலிக்கிறோம்.

## கூடுதல் செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டியிருக்கும்?

பணம் செலுத்தியதற்கான சான்றைக் காண்பிக்கின்ற ஆவணங்களை நீங்கள் உங்கள் வழக்கு அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டியிருக்கும்.
பணம் செலுத்தியதற்கான பொதுவான சான்றாவணங்கள்:

1. குழந்தையின் பள்ளியிடமிருந்து பள்ளிக் கட்டணங்களைக் காண்பிக்கின்ற ஒரு ஒப்புதல் கடிதம்; மற்றும்
2. பள்ளிக்கு வழங்கிய தொகையைக் காண்பிக்கின்ற இரசீதுகள்.

## கூடுதல் செலவுகளைச் செய்வதற்கு என்னால் இயலவில்லை என்றால் என்னவாகும்?

உங்கள் குழந்தையின் பணத்திலிருந்து செலவுகளுக்காகப் பணம் வழங்குவதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டால், நாங்கள் பள்ளிக்கு நேரடியாகப் பணம் வழங்குவோம்.


**இணையத்தளம்:**
https://pto.mlaw.gov.sg

**தொலைபேசி:**
தொலைபேசி: 1800-2255-529
தொலைப்பிரதி: (65) 6224-2858

**முகவரி:**
The URA Centre (East Wing)
45 Maxwell Road #07-11
Singapore 069118


**மின்-உதவியாளர் (இ-ஹெல்பர்) இயங்கும் நேரங்கள்:**
திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை